செ.வெ.எண்: 30 நாள்:13.10.2021

**மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் உலக கைகள் கழுவும் தின உறுதிமொழி அனைத்து துறை அலுவலர்களும் எடுத்துக்கொண்டனர்.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (13.10.2021) பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை உலக கைகள் கழுவும் தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் உலக கைகள் கழுவும் தின உறுதிமொழியினை அனைத்து அரசு துறை அலுவலர்களும் எடுத்துக் கொண்டனர். கைகள் கழுவும் செயல் விளக்கத்தினை மருத்துவர்கள் அலுவலர்களுக்கு செய்து காண்பித்தனர்.

ஆண்டுதோறும் அக்டோபர் - 15 -ம் நாள் உலக கைகள் கழுவும் தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு அக்டோபர் 15 -ம் நாள் விடுமுறை தினம் என்பதால் இன்று (13.10.2021) உலக கைகள் கழுவும் தினம் அனுசரிக்கப்பட்டு, உலக கைகள் கழுவும் தின உறுதிமொழி அனைத்து அரசு துறை அலுவலர்களும் எடுத்துக்கொண்டனர்.

**உலக கைகள் கழுவும் தின உறுதிமொழி:**

**“கைகள் சுத்தம், வேண்டும் நித்தம்”**

- கைகள் கழுவும் பழக்கத்தை அன்றாட வாழ்வில் நான் தினமும் கடைப்பிடிப்பேன்.
- தினமும் கைகளை சோப்பு மற்றும் சோப்பு கரைசல் போட்டு ஒவ்வொரு முறையும் குறைந்தபட்சம் 20 வினாடிகள் கழுவுவேன். இதன் மூலம் ஏற்படும் நன்மைகளை எனது நண்பர்களுக்கும், சுற்றத்தாருக்கும் எடுத்துக் கூறுவேன்.
- உணவு உட்கொள்வதற்கு முன்பும், பின்பும், கழிவறையை உபயோகப்படுத்திய பின்பும், வெளியில் சென்று வீடு திரும்பிய பின்பும் தவறாமல் கைகளை கழுவுவேன்.
- முறையாக கைகளை கழுவுவதன் மூலம் வயிற்றுப்போக்கு, மஞ்சள் காமாலை, கொரோனா போன்ற சுவாச தொற்று நோய்கள், குடற்புழுக்கள், டைபாய்டு, சீதபேதி போன்ற நோய்களை தவிர்க்க முடியும் என்பதை அறிவேன்.
- குழந்தைகளுக்கு கைகள் கழுவும் முறைகளை தெளிவாக எடுத்துரைப்பதன் மூலம் குழந்தைகள் உடல் ஆரோக்கியத்தை பேணுவதோடு, கல்வியில் முன்னேற்றம் காண முடியும் என்பதை அறிவேன்

என்ற உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களும் கொரோனா தடுப்பு வழிமுறைகளுடன், சமூக இடைவெளியை கடைபிடித்து எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.ராஜேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.பி.முருகன், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.பி.பரமசிவன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வி.கோவிந்தன், தனித்துணை ஆட்சியர்கள் திருமதி.பாக்கியலட்சுமி, திரு.அமீர்பாஷா, மாவட்ட பரவியல் நோய் நிபுணர் மரு.பிரியதர்ஷினி மற்றும் அனைத்து துறை அலுவலர்கள், மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**